சார்பு நீதிமன்றம், இராஜபாளையம்

முன்னிலை - திரு.M.சண்முகவேல்ராஜ், பி.ஏ., பி.எல்.,எல்.எல்.எம்.,

சார்பு நீதிபதி, இராஜபாளையம்

2026 ம் ஆண்டு ஜூன் திங்கள் 19 ம் நாள் வெள்ளிக்கிழமை

அசல் வழக்கு எண்.203/2024

**(CNR – TNVR230019112024**

இராஜபாளையம் தாலுகா, சமுசிகாபுரம், வ.உ.சி நகர்,முதல் தெரு,கதவு எண்.11/272-C1 என்ற முகவரியில் குடியிருக்கும் R.ராஜேந்திரன் அவர்களின் குமாரர், இந்து, சுமார் 35 வயதுள்ள R.மனோஜ் கவாஸ்கர்,

.. .வாதி

/எதிர்/

1.விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் தாலுகா, மாரியம்மன் கோவில் தெரு, கதவு எண்.227 என்ற முகவரியில் குடியிருக்கும் R.வைரம் ராமையா ஆசாரி அவர்கள் குமாரத்தி,இந்து,சுமார் 45 வயதுள்ள V.முத்துலட்சுமி.

2.விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் தாலுகா, மாரியம்மன் கோவில் தெரு, கதவு எண்.227 என்ற முகவரியில் குடியிருக்கும் R.வைரம் ராமையா ஆசாரி அவர்கள் குமாரத்தி,இந்து,சுமார் 23 வயதுள்ள V.தீபிகா.

3.விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் தாலுகா, மாரியம்மன் கோவில் தெரு, கதவு எண்.227 என்ற முகவரியில் குடியிருக்கும் R.வைரம் ராமையா ஆசாரி அவர்கள் குமாரர்,இந்து,சுமார் 15 வயதுள்ள மைனர் V.ஹரிஸ்ராம்.

((Minor 3rd Defendant represented Through his mother the 1st defendant)

.... பிரதிவாதிகள்

பிரதிவாதிகளை, வாதிக்கு தர வேண்டிய கடனான ரூ.5,69,333.5/-ம் தொகைக்கு பிராது தேதி முதல் வட்டி செலுத்தும் காலம் வரை 2% வட்டியும்,(400000) செலுத்த உத்தரவிடக்கோரியும், வழக்கின் செலவுத் தொகையை பிரதிவாதிகள் வாதிக்கு செலுத்துவிக்கக் கோரியும் மற்றும் இதரப் பரிகாரங்கள் கோரியும் உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 7, விதி 1 of CPC ன் கீழ் வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| வழக்கின் மதிப்பு | - | ரூ. 5,69,333.5/ |
| நீதிமன்ற கட்டணம் | - | ரூ.17,080.005/-அதற்குதமிழ்நாடுநீதிமன்றக்கட்டணச் சட்டம் பிரிவு 22 ன் படி செலுத்தப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| வழக்கு மூலம் | - | 07.03.2020,08.09.2021 சமுசிகாபுரத்தில் வைத்து உற்பத்தி |
| வழக்கு தாக்கல் நாள் | - | 03.01.2022,10.01.2022,20.01.202203.02.2022 |
| வழக்கு கோப்பிற்கு எடுத்த நாள் | - | 04.02.2022 |

இந்த வழக்கானது ஸ்ரீவில்லிபுத்தூர் முதன்மை சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.55/2022 என 04.02.2022 ம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு வழக்கு விசாரணை நிலுவையில் இருந்து வந்த நிலையில் அதிகார வரம்பிற்கு உட்பட்டு இராஜபாளையம் சார்பு நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு இந்நீதிமன்றத்தில் அ.வ.எண்.203/2024 என எடுக்கப்பட்டு 19.06.2026 ம் தேதியன்று என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்த போது, வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.செல்வம் அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதிளை நீதிமன்றத்திற்கு அழைத்தும் தோன்றாத்தரப்பினர் ஆகிய நிலையில் வாதியின் தரப்பு வழக்கறிஞர் வாதியின் வழக்கு நீதிமன்றத்திற்கு வெளியே தீர்ந்துபோனதாக குறிப்பாணை தாக்கல் செய்து பதிவு செய்யப்பட்டதன் அடிப்படையில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும் ...

## தீர்ப்பாணை

1) வாதி தரப்பில் வழக்கை நீதிமன்றத்திற்கு வெளியே சமரசம் பேசி முடிக்கப்பட்டதாக குறிப்பாணை தாக்கல் செய்து பதிவு செய்யப்பட்டதன் அடிப்படையில் வாதியின் வழக்கு தள்ளுபடி செய்யப்படுகிறது.

2)செலவுத்தொகை இல்லை.

3) வாதி செலுத்திய நீதிமன்ற கட்டணத்தை விதிகளுக்கு உட்பட்டு திரும்ப பெற்றுக்கொள்ளலாம்.

2026 ம் ஆண்டு ஜூன் திங்கள் 19 ம் நாள் எனது கையெழுத்தும் இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

ஒப்பப்பம்

திரு. M.சண்முகவேல் ராஜ் B.A.,B.L.,L.L.M.,

சார்பு நீதிபதி,

இராஜபாளையம்.